மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.42/2015

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் (Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.30.08.2024

வா.சா.1

**2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் மீனவர் என்பதை காட்டுவதற்கு ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேனா என்றால் இல்லை தாக்கல் செய்கிறேன். அதேபோல் இந்த மற்ற வாதிகளும் மீனவர்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் கருப்பையா என்பவருக்கு தாக்கல் செய்துள்ளேன். கருப்பையா மற்றும் நாகராஜன், நம்பு (எ)தில்லை ஆகியோர்களுக்கு இறப்பு சான்றிதழோ, வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது மண்டபம் வார்டு.11, 12, 15 அதன்பிறகு தற்போது 17 வார்டில் இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண்.240/2 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 12 செண்டாகும். இந்த 12 செண்ட்டில் தான் 1ம் பிரதிவாதிக்கு 5 1/2 செண்டை கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல அது 240/1ல் உள்ள சொத்தை தான் கொடுத்துள்ளேன் தற்போது 240/8 ஆகும். இறந்துபோன நாகராஜனின் வாரிசுகள் பாகப்பிரிவினை வேண்டி தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரிதானே என்றால் 1வது இலக்க சொத்தை பாகம் கேட்டு போட்டுள்ளார்கள். பொதுவாக பாகப்பிரிவினை வழக்குகளில் எல்லா சொத்துக்களுக்கும் சேர்த்து தான் வழகககு தொடுக்கப்படும் எனவே அந்த வழக்கில் மட்டும் தாவா சொத்து மட்டும் உரிமையாக இருந்ததால் அதற்கு மட்டும் பாகப்பிரிவினை வழக்கு போடப்பட்டது என்றால் கிரையம் கொடுத்த சொத்துக்களுக்கு மட்டும் தான் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளார்கள். வா.சா.ஆ.24 ஆவணத்தில் OS.No.135/2004 அழகம்மாள் வகையறா தாக்கல் செய்த வழக்கில் இந்த வழகககு தாவா சொத்து சேர்த்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் 2வது இலக்க சொத்து விற்பனை செய்யப்படாததால் அந்த வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அந்த வழக்கில் 2வது இலக்க சொத்தை விட்டுவிட்டு மற்ற சொத்துக்களுக்காக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்வதாக நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெற்றீர்களா என்றால் இல்லை. அதன்பிறகு நாங்கள் அந்த வழககில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது வாதிகள் இதர சொத்துக்களை விட்டுவிட்டார்கள் என்று சொல்லியுள்ளோமா என்றால் கூட்டுக்குடும்பமாக இருந்ததால் அவசியமில்லை. இந்த வழக்கில் தாவா சொத்து

உரிமையிருப்பதாக கோரி ஏதாவது உரிமைகோரல் இருப்பதாக 4, 5, 6 பிரதிவாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நாங்கள் சொல்லியுள்ளோம். OS.No.135/2004 வழக்கில் இந்த வழக்கு தாவா சொத்தை பொறுத்து எந்தவித குறிப்புகளோ, வாசகங்களோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 4ம் வாதிக்கு தற்போது வயது என்ன என்றால் தற்போது 28 ஆகும். 5வது வாதிக்கு 26 வயது ஆகிறது. 9வது வாதிக்கு 24 வயது ஆகிறது. 10 வாதிக்கு 22 வயதாகிறது. இவர்கள் எல்லாம் மைனராக இருக்கும்போது இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அவர்கள் எல்லாரும் மேஜர் ஆகிவிட்டார்கள் என்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோமா என்றால் பாகப்பிரிவினை வழக்கில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கு மேற்கு பக்கமாக 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அதில் சகோதர, சகோதரிகளுக்கு பங்கு உண்டு. வா.சா.ஆ.23 ஆவணத்தில் 1ம் வாதியும், காளீஸ்வரியும் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையபத்திரத்தை எதிர்த்து எந்த வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ஆவணத்தில் நாங்கள் ராஜவேலுவுக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தில் சொல்லப்பட்ட நான்கு எல்லையில் எந்த பக்கமும் எங்களுக்கு சொத்து இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கோவிந்தக்கோன் வீட்டிற்கும், நிலத்திற்கும் மேற்கு என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் பிழைதிருத்தம் பத்திரம் போடுவதற்கு அழைத்தோம் வரவில்லை. பிழைதிருத்தம் பத்திரம் போடுவதற்கு அழைத்தாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை அடமானப்பத்திரம் போட்டுள்ளோம். நிரூபண வாக்குமூலத்தில் 15வது பாராவில் தகர செட்டின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சண்டை வந்ததால் அளக்கவில்லை. அந்த சம்பவம் தொடர்பாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளதில் அந்த அறிவிப்பு வா.சா.ஆ.10 பிரதிவாதிகளுக்கு சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 நாங்கள் அனுப்பிய அறிவிப்பிற்கு அத்தாட்சியாக postal Ad card வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. மண்டபம் பஞ்சாயத்து எந்த சொத்தில் ஹலோ பிளாக் சாலை அமைத்துள்ளார்கள் என்றால் சர்வே எண்.240/2ல் அமைத்துள்ளார்கள். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு அந்த சாலை அமைந்துள்ளது என வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். இந்த வழக்கில் சாலையின் விஸ்தீரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். சர்வே எண்.240/2 ல் பிரதிவாதிகள் எவ்வளவு சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். சர்வே எண்.240/2 வருவாய் ஆவணங்களின் படி சர்க்கார் அரசு புறம்போக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை ஆக்கிரமிப்பில் இருப்பதாக உள்ளது. சர்வே எண்.240/2க்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். பொய்யாக சொல்கிறேன் அவ்வாறு எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல புலவரைபடம் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.240/1, 240/2, 240/8 ஆகியவற்றிற்கு பட்டா, சிட்டா, புலவரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எங்களுக்கு எதிராக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தில்

வழக்கறிஞரின் கையொப்பமோ, எந்தவிதமான endorsement காணப்படவில்லை என்றால் சரிதான் அது நகலாகும். அதன் அசல் எங்கே என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி சௌந்தரவள்ளி மாமனார் கோவிந்தன் என்பவர் எங்கள் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், 3 ஆண்டுகளுக்கு முன் அரசுக்குடியிருப்பில் குடியிருப்பதற்காக சென்றுவிட்டார். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கோவிந்தன் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக எதிர்வாதம் செய்திருப்பதால் கோவிந்தனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அந்த இடத்தை விட்டு காலி செய்து போய்விட்டதால் சேர்க்கவில்லை. அந்த கோவிந்தன் தான் 2ம் பிரதிவாதியின் மாமனார், 3ம்பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். சீர்திருத்தப்பிராதிலும் கோவிந்தனை தரப்பினராக சேர்ப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான் கோவிந்தன் காலி செய்தபின்பு இறந்துவிட்டார் அதனால் சேர்க்கவில்லை. மேற்படி கோவிந்தன் என்ற கோவிந்தக்கோனார் எங்களது வாடகைதாரார் இல்லை, அந்த சொத்தின் உரிமையாளர் அந்த சொத்தின் 3 செண்டு நிலத்தினை 1968ல் இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் முகவரி தவறு என்று சொல்லப்பட்ட பின்பு அதனை சீர்திருத்தம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கோவிந்தக்கோனார் தாவா சொத்தில் 1968ல் இருந்து வீடு கட்டி, வரி வகையறாக்கள் செலுத்தி வீடு கட்டி தன் காலம் வரை அனுபவித்து வந்து, அதன்பின்பு 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகளின் அனுபவத்தில் அந்த சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல, அவர் அரசு ஊழியர் குடியிருப்பில் தான் இன்று வரை இருந்து வருகிறார். அ.வ.எண்.34/2015 வழக்கில் சர்வே எண்.240/2ல் பற்றி அளப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்யப்பட்டது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் ஆணையர் தாக்கல் செய்த இடைக்கால மற்றும் இறுதி ஆணையர் அறிக்கை என்றால் சரிதான். அந்த **இடைக்கால அறிக்கை பி.வா.சா.ஆ.4 ஆகும். ஆணையர் இறுதி அறிக்கை பி.வா.சா.ஆ.5 ஆகும்.** அந்த ஆணையர் அறிக்கையில் PQRS பகுதியில் 2ம் பிரதிவாதி சௌந்தரவள்ளி வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் தவறாக சொல்லியுள்ளார். தாவா சொத்தை எனது பெயருக்கு made over செய்ததாக சொல்லியுள்ளதில் இன்றுவரை அந்த made over ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் ரத்து செய்யப்படததால் வாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருவதாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் 2வது இலக்க சொத்தின் நான்கு எல்லையில் கோவிந்தக்கோனார் வீடும், இடத்திற்கும், மாரியம்மன் கோவில் கிணறுக்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.13ல் சொத்துவிபரத்தில் இராமநாதபுரம் சமஸ்தான காலி நிலத்திற்கும், கிணற்றிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்தில் இராமநாதபுரம் சமஸ்தான காலி நிலத்திற்கும், கிணற்றிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணத்திலும் சர்க்கார் நிலத்திற்கும், கிணற்றிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16ல் மாரியம்மன் கோவில் நிலத்திற்கும், கிணற்றிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17ல் கோவிந்தக்கோனார் வீடு கட்டி இருக்கும் நிலத்திற்கும், மாரியம்மன் கோவிலுக்கு மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.18 ஆவணத்தில் தா.கோவிந்தக்கோனார் வீடு கட்டி இருக்கும் நிலத்திற்கும், மாரியம்மன் கோவிலுக்கும், கிணற்றிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.22, 23 ஆகிய ஆவணங்களில் கோவிந்தக்கோனார் வீடு கட்டி இருக்கும் நிலத்திற்கும், மாரியம்மன் கோவிலுக்கும், கிணற்றிற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் கோவிந்தக்கோனார் வீடும், மாரியம்மன் கோவிலும்சொல்லப்பட்டுள்ளதில் கோவிந்தக்கோனார் வீட்டை மறைத்து இந்த வழக்கில் சொத்துவிபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல மாரியம்மன் கோவிலுக்கு கிழக்கே தான் கோவிந்தக்கோனார் உள்ளார். வா.சா.ஆ.24 ல் தீர்ப்பாணையில் கிழக்கு பக்கம் கோவிந்தக்கோனார் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே பிரதிவாதிகள் 4, 5, 6 கோவிந்தக்கோனாரின் அனுபவ உரிமையை ஒப்புக்கொண்டு தாவா தாக்க்ல செய்துள்ளதால் கூட்டுஅனுபவஸ்தர்கள் என்று சொல்லப்படும் வாதிகள் இந்த 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகளின் அனுபவத்தை எதிர்த்து வழக்கிட முடியாது என்றால் சரியல்ல எங்களுடைய கிரைய பத்திரத்தின் வெளியே தான் கோவிந்தக்கோனார் இருக்கிறார் அதனால் எங்களை கட்டுப்படுத்தாது. கோவிந்தக்கோனாரின் வாரிசுகளான 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ளார்களா இல்லை தாவா சொத்திற்கு வெளியில் உள்ளார்கள் என ரூசு செய்யாதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலயாவது இலவச சட்ட உதவி மையத்தில்(PLV) இருந்துள்ளேனா என்றால் சரிதான். PLV யாக எத்தனை வருடம் இருந்தேன் என்றால் 2010 to 2011 வரை இருந்தேன். அதனால் சொத்து சம்பந்தமாக சட்ட அறிவு இருக்கும் என்றால் சரிதான். சொத்தின் உரிமையாளராக உரிமை கோரும் நான் சொத்திற்கு வட்டாட்சியரிடம் பட்டா கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல வருடம் தோறும் மனு கொடுத்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகளில் கதவு எண் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல வார்டு மாறும்போது கதவு எண் மாறும். கதவு எண்.15/55, இடையர் தெரு என்பது நாகராஜன், த/பெ.சேது என்று தான் உள்ளது மற்ற வாதிகளின் பெயரில் இல்லை என்றால் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் உள்ளது. நாகராஜனின் வாரிசுகள் 2 வது இலக்க சொத்தை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நாங்கள் வாரிசுகளை சேர்த்துள்ளோம். இறந்துபோன நாகராஜனின் வாரிசுகள் தான் 4, 5, 6 வாதிகள் என்று ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி நாகராஜனின் வாரிசுகள் பாகப்பிரிவினை கோரி வழககு தாக்கல் செய்த பின்பு அதை நிறைவேற்ற உரிய கால அளவிற்குள் மனு செய்யாமல் தற்போது அதை சரி செய்யும் விதமாக இந்த வழக்கானது வஞ்சக்கூற்றுடன் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்ப்பட்டுள்தால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாவாவில் கோரும் சொத்து பூமியில் இல்லை தவறான, கற்பனையான விஸ்தீரணம், நான்கு எல்லைகள் உடன் தாக்கல் செய்ப்பட்ட தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுமார் 60 ஆண்டுகாலமாக 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகளின் முன்னோரான கோவிந்தக்கோனார் சர்வே எண்.240/2 ல் 3 செண்ட் நிலத்தை அனுபவித்து வரும் நிலையில் அவருக்கு தீங்குவிளைவிக்க வேண்டும் என்ற நோக்கில் சட்டப்படியான கால அளவிற்கு பின்பாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு காலவரையறை சட்டப்படி கால அளவுகளுக்குள் அனுபவிக்கும் அனுபவஸ்தருக்கு எதிராக வாதிகள் தாக்க்ல செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.சீர்திருத்த தாவாப்படி கோரியுள்ள பரிகாரத்திற்கு முறையான

நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தினால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி சொத்துவிபரத்தின் மதிப்பு ரூ.2,60,000/– என சொல்லப்பட்டுள்ளது என்றால் அப்ப உள்ள காலகட்டத்திற்கு சரிதான். 1வது இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5 1/2 செண்ட் என்றால சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தின் படி நான் மண்டபம் நகராட்சி ஆக்கிரமிப்பு செய்துள்ள சொத்தின் மதிப்பு ரூ.5,00,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் எழுதவில்லை போலீசார் எழுதினார்கள். எனது தங்கை காளீஸ்வரி, பர்வதவர்த்தினி கொடுத்த புகாரின் அடிப்படையில் போடப்பட்ட முதல் தகவல் அறிக்கை தான் வா.சா.ஆ.11 என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11ல் 1வது வாதியும், காளிஸ்வரியும் கொடுத்த தகவலின் படி பதிவு செய்யப்பட்டது, நான் வேண்டுமென்றே பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் சொத்தின் மதிப்பு ரூ.5,00,000/– என கூறியதால் சொத்தின் மதிப்பை குறைவாக மதிப்பீட்டு நீதிமன்றம் கட்டணம் செலுத்தி தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல நீதிமன்றத்தை வேண்டுமென்றால் நான் கட்டுவேன். வ.சா.ஆ.1 முதல் வ.சா–ஆ.5 வரை ஆவணங்கள் எல்லாம் எனது அக்கா பர்வதவர்த்தினி தான் அனுப்பியுள்ளார் அதிலுள்ள விபரங்கள் எல்லாம் அவருக்கு தான் நன்கு தெரியும் என்றால் எனக்கும் தெரியும், எல்லாருடைய சம்மதத்தின் படி தான் அவர்அனுப்பியுள்ளார். 1ம் வாதிக்கு தான் வழக்கு பற்றி முழுவிபரம் தெரியும் அவரை விசாரித்தால் எங்களுக்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 4, 5, 6 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிகள் அனைவரும் இராமேஸ்வரம் தம்பியான் கொல்லையில் வசித்துவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதேபோல் தாவா சொத்தில் எந்த வீட்டு எண் உள்ளது என்று முரண்பாடு உள்ளதாலும், தாவா சொத்தானது வீட்டு எண்.15/55, 15/56 என்ற முகவரியில் தான் உள்ளது என ரூசு செய்ய தவறிவிட்டதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1, 2, 3, 7, 8, 9 ஆகியோர் தாவா சொத்தில் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விபரம் குறிப்பாககுறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவதிகள் 2, 3, 7, 8, 9 ஆகியோர் தாவா சொத்தின் 3 செண்ட்நிலத்தில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துவருவதால் சட்டப்படி சொத்தை அனுபவிக்க அவர்களுக்கு அருகதை உள்ளது என்றாலும், தாவாவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு எதிராக கிடைக்கத்ததக்கது அல்ல என்றாலும், இந்த வழகக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.